| | | |
|---|---|---|
| சாட்சி : PW2<br>ரமேஷ், த/பெ விஸ்வநாதன் | அ.வ.எண்.120/2012 | 16.04.2026 |

**குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலத்திற்கு விவரம் சொன்னது நான் தான். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி சந்திரசேகரனின் சகோதரியின் மகன் ஆவேன். அவர் அழைத்ததின் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதிக்கும், பிரதிவாதிக்கும் உரிமையுள்ள பொதுவாக சுவற்றை பிரதிவாதி மட்டுமே உரிமை கொண்டாடுவதை எதிர்த்து வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.
2. வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பத்திரத்தில் பொது சுவர் என்று குறிப்பிடப்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் மேற்படி சுவர் பொது சுவர் என குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பொதுசுவரின் அளவுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் மேற்படி ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை.
3. தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சுவர் பொதுசுவர்

இல்லை என்றாலும், எனது மாமாவிற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**Signed,**
ரமேஷ்

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார் |

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.